**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**முன்னிலை :- திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் புரட்டாசித் திங்கள் 29 ம் நாள்

**இடைநிலை மனு எண். 280/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 145/2022**

1. தவசு மல்லி.
2. சத்யா
3. கிருஷ்ணமூர்த்தி
4. பாரதி ..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**// எதிர்//**

1. மல்லிகா
2. கவிதா ...... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.செ.செந்தமிழ்ச்செல்வன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 05.01.2024 ம் தேதியன்று பிறப்பித்த (Exparte Order) ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151 சிபிசி-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவில் மனுதாரர்கள் அசல் வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆவார்கள். மனுதார்களுக்கு எதிராக எதிர்மனுதாரர் தரப்பில் விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் மனுதாரர்கள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்திட கடந்த 05.01.2024 ம் தேதியன்று வழக்கின் வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரர்களின் நெருங்கிய உறவினர் நாகப்பட்டினத்தில் இறந்து விட்ட படியால் மனுதாரர்கள் சென்ற காரணத்தால் மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞரை சந்தித்து நீதிமன்றத்தில் முன்னிலையாகி எதிர் வழக்குரை தாக்க செய்ய இயலவில்லை. எனவே, மனுதாரர்கள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்ினால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 05.01.2024 ம் தேதியன்று பிறப்பித்துள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும், உண்மை நிலவரப்படிக்கும், நிலைநிற்க கூடியதல்ல. ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்ய வேண்டும். மனுதாரர்கள் மனுவினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது.

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள விபரங்களை நிரூபணம் செய்ய யாதொரு ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும்,

மேற்படி வாதிகளுக்கு வீண் மன உளைச்சலை ஏற்படுத்த வேண்டும் என்றும், ஏதோ ஒரு மனுவை தாக்கல் செய்ய வேண்டும் என்று மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது.

மேற்படி மனுதாரர் பொய்யான விவரங்களை கூறி இந்த மனு தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கில் மனுதாரர் இந்த மனு கொடுத்திருப்பது சட்டப்படி நிலை நிற்க தக்கதல்ல என்றும், வேண்டுமென்றே வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் செயல்பட்டுவிட்டு இதுபோன்றதொரு மனு கொடுத்திருப்பது இந்த எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் துர்லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தையே காட்டுவதாக உள்ளது. எதிர்மனுதாரருக்கு யாதொரு நீதியின் பலனும் கிடைத்துவிடக்கூடாது என்ற கெட்ட நோக்கத்தில் எதிர்மனுதாரருக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. எனவே இந்த மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரரால் இந்த எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

5. <u>தீர்வு</u> :-

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது இம்மனுவின் எதிர்மனுதாரர்/வாதியால், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரமும், அதனை தொடர்ந்து வாதிகளுக்கு 5ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாரிசு சான்று வழங்க கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 05.01.2024 ம் தேதியன்று 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அன்றைய தினம் 1 முதல் 4 பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாக முடிவு செய்து ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**4.** இந்நிலையில் மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், 2 ஆண்டுகள் வரை எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்து விட்டு ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பின்பு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்நீதிமன்றம் கவனமாக கருத்தில் கொள்கிறது.

**5.** மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடுவதால், எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், மனுதாரர்கள் அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு நீதியின் நலன் கருதி இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6. முடிவில்,** மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ கடந்த 22.10.2024 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 22.10.2024.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (15.10.2024) அவையறியப் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2024.10.18 18:16:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2024.10.18 18:16:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.